# Information About Performing Tamil Drama

**N. Parameshwari**

*Head of Department, Rathinam College of Arts And Science, Eachanari, Coimbatore Tamil Nadu, India*

***Article History***

**Received:** 15.06.2024

**Accepted:** 20.07.2024

**Published:** 30.07.2024

**Corresponding Author**
N. Parameshwari

**Email Id:**
Hod.tamil@rathinam.in

**Citation:**
Parameshwari, N. "Information About Performing Tamil Drama." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. S1, 2024, pp. 28–32.

***Abstract***

*Drama plays a major role in people's way of life. Tamil drama in all events, for dance; owed. Drama is known as the rice of the arts. The Tamil language consists of three divisions namely, drama, music and drama. All the current news is brought into play as well. Drama has its own personality. Listening requires language. DKS was among the pioneers in conducting social awareness plays. The brothers and the crew of the Savage Stage are remarkable. Office procedures by them; occur Issues like office corruption etc. are also mentioned in plays. They wrote short dramas about the problems that were raging in the society. From the English language He composed five plays of Shakespeare in Tamil. Thus the role of drama in this study tells about the society.*

***Keywords: Tamil, Life, Beliefs, Individuality, Convention, Nature, Music***

***References***

1. *Anna's - Maid*
2. *Literary history - Bhakyameri*
3. *Origin and Development of Drama - Internet*
4. *Genres of Drama – Internet*
5. *Contemporary Tamil dramas*

# தமிழ் நாடக்கலை நிகழ்த்தும் தகவல்கள்

*முனைவர் ந. பரமேஸ்வரிரி*
தமிழ்த்துறைத்தலைவர், இரத்தினம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஈச்சனாரி, கோயமுத்தூர்

***ஆய்வுச்சுருக்கம்***
*நாடகம் மக்களின் வாழ்வியல் முறைகளில் பெரும்பங்கு வகிக்கின்றன. தமிழ் நாடகம் எல்லா நிகழ்வுகளிலும், நடனத்திற்கும் கடன்பட்டிருக்கிறது. கலைகளின் அரிசி என அழைக்கப்படுவது நாடகமாகும் தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது. நடைமுறையில் உள்ள செய்திகளை அனைத்தும் நாடகத்திலும் உள்ளவாறு கொண்டுவரப்படுகிறது. நாடகத்திற்கு எனத் தனிப்பாங்கு உள்ளது. கேட்பதற்கு மொழி தேவைப்படுகிறது. சமூக விழிப்புணர்வு நாடகங்களை நடத்தியதில் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்களுள் டி.கே. எஸ். சகோதரகளும் சேவாஸ்டேஜ் குழுவினர்களும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார். அலுவலக நடைமுறைள் அவற்றால் ஏற்படும் சிக்கல்கள் அலுவலகச் சீர்கேடு முதலானவையும் நாடகங்களில் கூறப்பட்டுள்ளன. சமுதாயத்தில் புரையோடிப் போயிருந்த பிரச்சனைகளைச் சிறு நாடகங்களாக எழுதினார்கள். ஆங்கில மொழியிலிருந்து சேக்சுபியரின் ஐந்து நாடகங்களைத் தமிழில் படைத்துள்ளார். ஆகவே இவ்வாய்வில் நாடகத்தின் பங்கு சமுதாயத்தைப் பற்றி கூறுகிறது.*
***முக்கியச்சொற்கள்:*** *தமிழ், வாழ்க்கை, நம்பிக்கைகள், தனிப்பாங்கு, மாநாடு, இயல், இசை*

## முன்னுரை

*தமிழ் நாடகங்கள் பற்றி, இலக்கியங்கள் நம்பிக்கைகள் நாட்டுப்புறச் சமயக் கூறுகள் ஆகியன உதவுகின்றன. தமிழ் நாடகங்களுக்கும் நாடகம் மக்களின் வாழ்க்கை மற்றும் செயல்பாடுகளை பின்பற்றுவதன் மூலம் ஒத்திருக்கிறது. இதனால் தமிழ் நாடகம் எல்லா நிகழ்வுகளிலும், நடனத்திற்கும் கடன்பட்டிருக்கிறது. கலைகளின் அரிசி என அழைக்கப்படுவது நாடகமாகும் தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது. இவற்றுள் நாடகம் தொன்மையும், தனிச்சிறப்பும் வாய்ந்ததாகும், இயலும், இசையும் கலந்து கதையைத் நடித்துக்காட்டப்படுவது நாடகமாகும். இப்படைப்பில் நாடகம் பற்றிய முறைகளும், தவகல்களும் ஆய்வுக்கட்டுரையாக அமைந்துள்ளன.*

## நாடகத்தின் தன்மைகள்

*நடைமுறையில் உள்ள செய்திகளை அனைத்தும் நாடகத்திலும் உள்ளவாறு கொண்டுவரலாம். நாடகத்திற்கு எனத் தனிப்பாங்கு உள்ளது. கேட்பதற்கு மொழி தேவைப்படுகிறது. அதன் வகையில் மொழியைப் பயன்படுத்தி, இசையும் அமைகிறது. இயலும், இசையும் கலந்து கதையைத் தழுவி நடித்துக் காட்டப்படுவது நாடகம். எட்டு வகையான உணர்ச்சிகளை ஒருவர் தம் மெய்ப்பாடு தோன்ற நடிப்பது நாடகத்தின் தனிச்சிறப்பாகும். தெருக்கூத்துக்களாக இருந்து மேடைநாடகங்களாக மாறி இலக்கிய நாடகங்களாக மலர்ச்சி பெற்றது.*

*கலைகளின் அரசி என அழைக்கப்டுவது நாடகமாகும். தமிழ் மொழி இயல் இசை, நாடகம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது. இவற்றுள் நாடகம் தொன்மையும் தனிச்சிறப்பும் வாய்ந்ததாகும். இயலும் இசையும் கலந்து கதையைத் தழுவி நடித்துக்காட்டப்பட்டது நாடகமாகும்.*

தற்கால வாழ்க்கையில் குடும்பத்தின் கௌரவத்திற்காக ஏழைகள் தங்கள் சக்திக்கு மீறிச் செலவுகள் செய்யும் போலித் தனத்தை அம்பலப்படுத்தும் நாடகங்களும் அமைந்துள்ளன.

## தமிழ் நாடக வளாச்சிக்கு திகழ்ந்தவர்கள்

ஒருவர் தன்னை ஒரு கதாப்பாதிரமாகவே மாறி திறமையாக நடக்கக்கூடியவராக இருப்பார்கள். கதைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவார்கள். பம்மல் சம்பந்தம் முதலியார், சங்கரதாசு சுவாமிகள், பரிதிமாற் கலைஞர் ஆகிய மூவரையும் தமிழ்நாடக மூவர் என்று அழைக்கப்படுகின்றன.

பம்மல் சம்பந்தம் : இவர் எழுதிய மொத்தம் நாடகங்கள்93ஆகும். இவரேதமிழ்நாடகத்தின் தந்தை என அழைகப்படுகிறார். மேலும் இவரைத் தமிழ் சேக்சுபியர் என்றம் அழைப்பர். இவர்தம் நாடகங்கள் இன்பவியல், துன்பவியல் கேளிக்கை, அங்கதம், நையாண்டி, வரலாறு, மொழிபெயர்ப்பு எனப் பலதரப்பட்டவையாகும். இவர் சுகுண விலாச சபை என்ற நாடகக் குழுவினை நடத்தி வந்தார். இக்குழுவினரால் நடத்தப்படும் நாடகத்தில் கற்றவர்களையும் அறிஞர்களையும் நடிக்கச் செய்தார். நாடகக் கலைக்த தம் 81 ஆவது வயது வரை பொரும்பணி ஆற்றினார்.

சேக்ஸ்பியரின் ஹேம்லெட் ஆஸ் யூ லைக் உள்ளிட்ட நாடகங்களை அமலாதித்யன் பெயர்களில் தமிழ் நாடகங்களாகப்பட்டன. பரிதிமாற் கலைஞர் - நாடகம், படித்தல், நடித்தல், இலக்கணம் வகுத்தல் என மூன்று பெரும் பணிகளை ஆற்றினார். நாடகவியல் என்ற தமிழ்நாடக இலக்கண நூலை இயற்றினார்.

## சங்கரதாசு சுவாமிகளின் பணிகள்

சங்கரதாசு சுவாமிகள் தரமான முறைப்படுத்தப்பட்ட தமிழ்நாடக வரலாறு இவரிலிருந்தே தொடங்குகிறது. இருபதாம் நூற்றாண்டு நாடகத்துறையை நசிவடையாமல் காத்ததால் இவரைத் தமிழ்நாடகத் தலைமையாசிரியர் எனப் போற்றுவர். ஆரம்ப காலத்தில் எமன் இராவணன் போன்ற எதிர்மறைக் கதாபாத்திரங்களில் நடித்து பின்னர் நாடக ஆசிரியரானார். இவர் "சமரச சன்மார்க" சபை என்ற நாடகக் குழுவினை நடத்தி வந்தார். இக்குழு சிறுவர்களை மட்டுமே நடிகர்களாக் கொண்டு நடத்தப்பபெற்றது.

## நாடகங்களின் வகை

தமிழ் நாடகங்களை அதன் கருப்பொருளைக் கொண்டு புராண நாடகம், இலக்கிய நாடகம், துப்பறியும் நாடகம், வரலாற்று நாடகம், நகைச்சுவை, மொழிபெயர்ப்பு நாடகம், தழுவல் நாடகம் என வகைப்படுத்தலாம். சுான்றாக புராண நாடகங்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றின. பிரகலாதன், ஐயப்பன், தசாவதாரம் சிறுத் தொண்டர் ஆகிய நாடகங்கள் குறிப்பிடத்தக்கன. இலக்கிய நாடகங்களைப் படித்து முடித்தவுடன் ஒரு நாடகம் பார்த்த நிறைவு கிடைக்கும். அவ்வகையில் சுந்தரதம்பிள்ளையின் - மணோம்மணீயம், பாரதிதாசனின் பிசிராந்தையார், மறைமலைணடிகளின் அம்பிகாபதி அமாராவதி, அ.ச. ஞானசம்பந்தனினி' தெள்ளாறு எறிந்த நந்தி முதலிய நாடகங்கள் இலக்கிய நாடககளுள் குறிப்பிடத்தக்கன ஆகும்.

## கோவிந்தசாமிராவ் பங்கு

இன்றைய தமிழ் நாடகக்கலைக்கு வித்திட்டோர் கி.பி. பத்தொண்பதாம் நூற்றாண்டளவில் தெருக்கூத்து என்ற நாடக வடிவம் தோற்றம் பெற்றது. தெருக்கூத்தென அழைக்கப்பட்டிருந்த நாடகக்கலையின் வளர்ச்சிக்கு வித்திட்டவராகக் கோவிந்த சாமிராவ் விளங்குகின்றார் நாடகத்தின் நேர அமைப்பினை இக்காலத்திற்கேற்ப மாற்றி அமைத்தவரும் ஆவார். கோவிந்தசாமி ராவ் கி.பி 1891 ஆம் அண்டளவில் பயின்முறை நாடகக் குழுவினைத் தோற்றுவித்த நாடகத்த தந்தை என அழைக்கப்பெற்ற பம்மல் சம்பந்த முதலியாரால் தமிழ்உரை நடை நாடகங்கள்

*தமிழ் நாடக மேடையினுள் அறிமுகம் செய்யப்பட்டது.*

**விழிப்புணர்வு நாடகங்கள்**

*சமூக விழிப்புணர்வு நாடகங்களை நடத்தியதில் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்களுள் டி.கே.எஸ். சகோதரகளும் சேவாஸ்டேஜ் குழுவினர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். அலுவலக நடைமுறைள் அவற்றால்' ஏற்படும் சிக்கல்கள் அலுவலகச் சீர்கேடு முதலானவையும் நாடகங்களில் கூறப்பட்டுள்ளன.*

*வானொலி நாடகங்கள் தொலைக்காட்சியின் வருகைக்கு முன்னர் பிரபலமான பொழுது போக்கு வடிவங்களாக இருந்தன மற்றும் 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் நடுப்பகுதி வரை வானொலி நிகழ்ச்சிகளில் பிரதானமாக இருந்தன. அவை நகைச்சுவை, மர்மம், அறிவியல், புனைகதை, திகில் மற்றும் காதல் உள்ளிட்ட பல்வேறு வகைகளை உள்ளடக்கியவை ஆகும்.*

*நாடகம் என்பது ஒரு கலை அல்லது பலவகை கலைகளின் கூட்டுச் சேர்க்கையாம். அதாவது நாட்டு மக்களின் அகத்தை பிரதிபலிக்கும் கலை ஆகும்.*

**சம்பந்த முதலியாரின் செயல்பாடுகள்**

*கல்வி கற்கும் நாளிலேயே சம்பந்த முதலியார் நாடகத்தில் ஆர்வம் கொண்டார். 1883 ஆம் ஆண்டு பள்ளி விழாவில் அலெக்சாண்டரும், கள்வனும் என்னும் ஆங்கில நாடகத்தில் கள்வனாக வேடமேற்றார். பிற நாடகக் குழுக்களின் நாடகங்களைக் காண நேர்ந்த போது நாடகக்கலை தொடர்பான சிந்தனையை வளர்க்கத் தொடங்கினார். மேனாட்டு நாடகங்களை விரும்பிப் பார்த்தார். நம் நாடகங்களின் குறைகளைக் கண்டறிந்தார். இக்குறைகளை நீக்க வேண்டி மேனாட்டு நாடகமுறையை அறிமுகப்படுத்த எண்ணினார். இதன் விளைவாக பயின்முறை நாடகப் படைக்க முடிவு செய்தார்.*

**மொழிபெயர்ப்பு நாடகங்கள்**

*மொழி பெயர்ப்பு நாடகங்கள் சம்பந்த முதலியார் மேனாட்டு நாடகங்களையும், வடமொழி நாடகங்களையும் தமிழில் மொழி பெயர்த்தார். தொன்மை இலக்கியங்கள் மற்றும் வரலாற்று நிகழ்வுகளை நாடகமாக்கினார். சமுதாயத்தில் புரையோடிப் போயிருந்த பிரச்சனைகளைச் சிறு நாடகங்களாக எழுதினார். ஆங்கில மொழியிலிருந்து சேக்சுபியரின் ஐந்து நாடகங்களைத் தமிழில் படைத்துள்ளார்.*

*பிரஞ்சு மொழியிலிருந்து ஒரு நாடகத்தினைக் காளப்பனின் கள்ளத்தனம் என்ற பெயரில் நாடகமாகத் தந்தார். மொழி பெயர்க்கப்பட்ட நாடகங்களின் நிகழ்வுகள் தமிழ்ப்பாங்கானவை பாத்திரப் பெயர்களும் அவ்வாறே அமைக்கப்பட்டன்.*

*முதலியாரின் படைப்புகளில் ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருத நாடகங்களின் தழுவல்களும் அசல் வெளியீடுகளும் அடங்கும். இவை மிகுந்த உற்சாகத்துடன் பெறப்பட்டன. படித்தவர்கள் நாடகத்தின் சாத்தியக் கூறுகளில் தங்கள் கவனத்தை, சிலர் நாடகச்சபாவில் சேர்ந்து நடிக்க ஆரம்பித்தனர்.*

*இது சிறந்த தார்மீக மற்றும் கல்வி மதிப்பின் மையமாக மாறியது. உரைநடை முக்கியத்துவம் பெற்றது. மற்றும் நாடகங்களில் யதார்த்தமான நடிப்பு வலியுறுத்தப்பட்டது. முதலியார் மேடை மாநாடுகளை மாற்றினார் புதிய செட் மற்றும் இயற்கைக்காட்சிகளை உருவாக்கி பார்வையாளர்களை ஆச்சரியப்படுத்தினார். தமிழ் நாடகத்தின் சிறந்த ஆசிரியராகப் போற்றப்படும் டி.பி கிருசு்ணசுவாமி பாவலர் ஆவார்.*

**அண்ணாவின் நாடகங்களில் சமுதாயப்போக்கு**

*அறிஞர் அண்ணாவின் வேலைக்காரி நாடகத்தில் நடனம் ஆடுவதற்கு போவதாக குறிப்பிட்டுள்ளது. ஆகவே நடனம் நாடகத்தில் இடம்பெறுகிறது. கடன்பெற்ற ஒருவர் திருப்பி தர முடியாமல் மரக்கிளையில் ஊயிரை*

*விடுகிறார். தன் மானம் முக்கியம் என்பதை நிலைநிறுத்தப்படுகிறது. வேலைக்காரியான அமிர்தம் அவ்வீட்டில் உள்ளவர்களுக்கு மதிப்பு கொடுத்தே ஆகவேண்டும் என்ற கட்டாயம் நிலை ஏற்படுகிறது. வேலைக்காரி என்றால் சுதந்திரமாக நடமடமுடியவி'லை. இதெல்லாம் சமுதாயத்தைப்பற்றியே காணப்படுகிறது.*

*அவன் பித்தனா என்ற நாடகத்தில் காளி தேவியின் விக்ரஹத்தைப் பார்த்து கேள்வி கேட்டான். பின் உடைத்து விட்டான். விக்ரஹரம் புனிதமானது. துன் வேண்டும் வரங்கள் தரவில்லை என்ற குற்றசாட்டுகள். ஒருவரின் குறையை தீர்க்கத் தான் கடவுள் ஆனால் கடவுளே துணைநிற்கவில்லை என்ற தன் கவலை மற்றம் கோவம் இதனை கொண்டு நாடகம் அமைகப்பட்டு இருப்பது மக்களின் நம்பிக்கையே ஆகும்.*

**முடிவுரை**

*நாடகங்கள் மக்களின் எண்ணங்கள் வாழ்க்கையின் நிலைகள் ஆகியவைகள் கொண்டு உள்ளது. ஆகவே முன்னோர்கள் நாடகத்திற்கு என்று நேரங்களையும், தனித்திறன்களையும் கொண்டு செயல்படுத் திருக்கிறார்கள். இக்கட்டுரை சிறந்த படைப்பாக நாடகத்தின் செயல்கள், முறைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள முடிகிறது. சமுதாய நிலைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வும் அடங்கியுள்ளது.*

**துணைநூற் பட்டியல்**


1. *அண்ணாவின் - வேலைக்காரி*
2. *இலக்கியவரலாறு - பாக்கியமேரி*
3. *நாடகத்தின் தோற்றமும், வளர்ச்சியும் - இணையம்*
4. *நாடகம் வகைள் - இணையம்*
5. *தற்கால தமிழ்நாடகங்கள் - இணையம்*